සමාජ සේවා දෙපාර්තමේන්තුව
சமூக சேவைகள் திணைக்களம்
DEPARTMENT OF SOCIAL SERVICES
ග්‍රාමීය සංවර්ධන, සමාජ ආරක්ෂණ සහ ප්‍රජා සවිබලගැන්වීම් අමාත්‍යාංශය
கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு
Ministry of Rural Development, Social Security and Community Empowerment

"ආත්නිකරණයට හා අවාසිසහගත තත්ත්වයන්ට පත් වූ සෑම නැනැත්තෙකුම සුරක්ෂිත හා අන්තර්කරණීය සමාජයක අභිමානයෙන් යුතුව ජීවත් වීම සඳහා සවිබලගැන්වීම"
"அனைத்து ஓரங்கட்டப்பட்ட மற்றும் பின்தங்கிய நபர்களினதும் பாதுகாப்பு மற்றும் அவர்களை சமூகத்தில் உள்வாங்கி கண்ணியத்துடன் வாழ வலுவூட்டல்"
" Every marginalized and disadvantaged person empowered to live with dignity in a caring and inclusive society"

මගේ අංකය எனது இல. My No. SSD/02/07/08/01 (III)

ඔබේ අංකය உமது இல. Your No.

දිනය திகதி Date 2026.05.

மாவட்டச் செயலாளர்,
மாவட்டச் செயலகம்,
திருகோணமலை

திறன் விருத்திப் பகல் நேரப் பராமரிப்பு நிலையங்களுக்குப் பணியாளர்களினை ஆட்சேர்ப்புச் செய்தல்.

சமூக சேவைகள் திணைக்களத்தின் வருடாந்தப் பாதீடு தொடர்பில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடலில் வழங்கப்பட்ட ஆலோசனைகளின் பிரகாரம் தங்கள் மாவட்டத்திலுள்ள அங்கவீனமுற்ற பிள்ளைகளுக்காக திறன் விருத்தி பகல்நேரப் பராமரிப்பு நிலையமொன்றினை, இவ்வருடத்தில் ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டு வருகிறது

02. இந்நிலையம் தொடர்பில் தேவையான பின்வரும் பதவிகளினை, தற்காலிகத் தினசரிக் கொடுப்பனவினை வழங்குவதன் அடிப்படையின் கீழ் ஒரு வருடக் காலப்பகுதிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு, அரச சேவையின் ஆட்சேர்ப்பு நடைமுறையினை மீளாய்வு செய்தல் மற்றும் பணியாட்தொகுதியினை முகாமை செய்வதற்கு அமைச்சரவையினால் நியமிப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர் குழுவினூடாக அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அவ் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளினுள் தங்கள் மாவட்டம் தொடர்பில் பிரேரிக்கப்பட்ட திறன் விருத்தி பகல்நேரப் பராமரிப்பு நிலையங்கள் தொடர்பிலான பின்வரும் தகவல்கள் மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை பின்வருமாறாகும்.

தொடர் இலக்கம்	பதவிகளின் பெயர்	வெற்றிடங்களின் எண்ணிக்கை
01.	முன்பள்ளி ஆசிரியர்	20
02.	உதவியாளர் (செவிலியர்)	13
03.	அலுவலகப் பணியாளர்	02

03. மேற்குறிப்பிட்ட பதவிகள் தொடர்பில் தகைமைகளினைக் கொண்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சையொன்றினூடாக தெரிவு செய்யும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுதல் வேண்டும். அதன் பிரகாரம் பொது விளம்பரத்தினைப் பிரசுரித்தல் மற்றும் தங்களின் இணையத்தளத்தில் விளம்பரத்தினை வெளியிடுவதனூடாக இப்பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் அறிவிப்பினை (இணைப்பு 01) பிரசுரித்து விண்ணப்பங்களினை ஏற்றுக்கொள்ளும் செயற்பாடுகளினை முன்னெடுக்குமாறும் மற்றும் நேர்முகப் பரீட்சை சபையின் அங்கத்தவரொருவராக நியமிப்பதற்கு இப்பதவிகள் தொடர்பில் சிறந்த அறிவினைக் கொண்ட தங்கள் அலுவலகத்தின் உத்தியோகத்தர் ஒருவரினைப் பெயரிட்டு அனுப்புமாறும் தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்

04. இது தொடர்பில் தாங்கள் வழங்கும் ஒத்துழைப்பினை மிகவும் பாராட்டுகின்றேன்.

தர்சனீ கருணாரத்ன,
சமூக சேவைகள் பணிப்பாளர்.

02 වන මහල, II අදියර, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. 02 ஆம் மாடி, கட்டம் ii, செத்சிரிபாய, பத்தரமுல்லை. 02nd Floor, Stage II, Sethsiripaya, Battaramulla.

කාර්යාල අලුවලකම් Office 0112187050 0112187049
ෆැක්ස් தொலைநகல் Fax 0112186276 0112186010
ඊ-මේල් மின்னஞ்சல் E-Mail director@socialservices.gov.lk
වෙබ් අඩවිය இணையத்தளம் Website www.socialservices.gov.lk

අධ්‍යක්ෂ பணிப்பாளர் Director 0112187040
අතිරේක අධ්‍යක්ෂ மேலதிக பணிப்பாளர்; Additional Director 0112186279
ප්‍රධාන ගණකාධිකාරි பிரதம கணக்காளர் Chief Accountant 0112187059
සහකාර අධ්‍යක්ෂ உதவிப் பணிப்பாளர் Assistant Director 0112187053 0112186180 0112187042

CamScanner

பதவி வெற்றிடங்கள்

கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு

சமூக சேவைகள் திணைக்களம்

முன்பள்ளி ஆசிரியர்/அலுவலகப் பணியாளர்/உதவியாளர் (செவிலியர்)

(தினசரிக் கொடுப்பனவு வழங்குவதன் அடிப்படையின் கீழ்)

சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் அங்கவீனமுற்ற பிள்ளைகளுக்கென அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மாவட்டத் திறன் விருத்தி பகல்நேரப் பராமரிப்பு நிலையங்களுக்கு முன்பள்ளி ஆசிரியர் பதவிகள் 20, அலுவலகப் பணியாளர் பதவிகள் 02, மற்றும் உதவியாளர் (செவிலியர்) பதவிகள் 13, தொடர்பில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பின்வருமாறு காட்டப்பட்டுள்ள படிவத்திற்கமைவாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களினை, மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், திருகோணமலை என்ற முகவரிக்கு 2026.05.25 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். விண்ணப்பத்தினை வைத்து அனுப்பும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "முன்பள்ளி ஆசிரியர்/அலுவலகப் பணியாளர்/உதவியாளர் (செவிலியர்) - தினசரிக் கொடுப்பனவு வழங்குவதன் அடிப்படையில்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். www.trincomalee.dist.gov.lk / www.socialservices.gov.lk என்ற இணையத்தளத்தினூடாகவும் மாதிரி விண்ணப்பப் படிவம் மற்றும் விபரங்களினைப் பெற்றுக் கொள்ளலாம்..

இப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகள் :-

01. முன்பள்ளி ஆசிரியர் (பதவிகள் 20)

1.1 வயது வரையறை :-

விண்ணப்பங்களினைச் சமர்ப்பிக்கும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்குக் குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

1.2 கல்வித் தகைமைகள் :-

(அ) சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்களில் (02) திறமைச்சித்தியுடன் (சீ) ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் (06) க.பொ.த. (சா.தர) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

(ஆ) க.பொ.த. (உ..தர) பரீட்சையில் ஆகக் குறைந்தது ஒரு பாடத்தில் அல்லது (சாதாரண பொதுப் பரீட்சையினைத் தவிர்த்து) சித்தி பெற்றிருத்தல்.

1.3 தொழில்முறை தகைமைகள் :-

அரசினால் பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றிலிருந்து முன்பள்ளிக் கல்வி தொடர்பில் 03 மாதங்களுக்கும் குறையாத பாடநெறியொன்றினைத் தொடர்ந்து சான்றிதழொன்றினைப் பெற்றிருத்தல்.

1.4 அனுபவம் :-

பதவியுடன் தொடர்பிலான துறையிலுள்ள அனுபவம் விசேட அனுபவமொன்றாகக் கருதப்படும்.

CamScanner

1.5. **ஆட்சேர்ப்புத் திட்டம் :-**

அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்திசெய்யும் விண்ணப்பதாரர்களிடமிருந்து நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் கட்டமைப்புச் செய்யப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெறப்படும் மதிப்பெண்களின் திறன் ஒழுங்கின் பிரகாரம் ஆட்சேர்ப்பு இடம்பெறும்

1.7 **தினசரிக் கொடுப்பனவு :-**

ரூ. 41,317.00 + ரூ 17,800.00 (வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு) /30

1.8 **சேவை நிபந்தனைகள் :-**

இப்பதவி தற்காலிகமானது என்பதுடன், தினசரிக் கொடுப்பனவினை வழங்கும் அடிப்படையில் ஒருவருடக் காலப்பகுதிக்கு ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

02. அலுவலகப் பணியாளர் (பதவிகள் 02)

2.1 வயது வரையறை :-

விண்ணப்பங்களினைச் சமர்ப்பிக்கும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

2.2 **கல்வித் தகைமைகள் :-**

கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு தடைவைகளுக்கு மேற்படாது இரண்டு திறமைச்சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல்.

2.3. **தொழில்முறை தகைமைகள் :-**

தொடர்பற்றது

2.4 **அனுபவம் :-**

பதவியுடன் தொடர்பிலான துறையிலுள்ள அனுபவம் விசேட அனுபவமொன்றாகக் கருதப்படும்

2.5 **ஆட்சேர்ப்புத் திட்டம் :-**

அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்களிடமிருந்து நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் கட்டமைப்புச் செய்யப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெறப்படும் மதிப்பெண்களின் திறன் ஒழுங்கின் பிரகாரம் ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

2.6 **தினசரிக் கொடுப்பனவு :-**

ரூ. 37,725.00 + ரூ. 17,800.00 (வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு) /30

2.7 **சேவை நிபந்தனைகள் :-**

இப்பதவி தற்காலிகமானது என்பதுடன் தினசரிக் கொடுப்பனவினை வழங்குவதன் அடிப்படையின் கீழ் ஒரு வருடக் காலப்பகுதிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

CamScanner

03. உதவியாளர் (செவிலியர்) (பதவிகள் 13)

3.1 வயது வரையறை :-

விண்ணப்பங்களினைச் சமர்ப்பிக்கும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

3.2 **கல்வித் தகைமைகள்** :-

கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு தடைவைகளுக்கு மேற்படாது இரண்டு திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

3.3. **தொழில்முறை தகைமைகள்** :-

அரச மருத்துவமனை, மருந்தகம் அல்லது சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தனியார் மருத்துவமனையில் செவிலியர் தொடர்பில் பயிற்சியினைப் பெற்றிருத்தல். (சான்றிதழொன்றினூடாக உறுதிப்படுத்துதல் வேண்டும்)

3.4 **அனுபவம்** :-

பதவியுடன் தொடர்பிலான துறையிலுள்ள அனுபவம் விசேட அனுபவமொன்றாகக் கருதப்படும்.

3.5 **ஆட்சேர்ப்புத் திட்டம்** :-

அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்களிடமிருந்து நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் கட்டமைப்புச் செய்யப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெறப்படும் மதிப்பெண்களின் திறன் ஒழுங்கின் பிரகாரம் ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

3.6 **தினசரிக் கொடுப்பனவு** :-

ரூ. 37,725.00 + ரூ.17,800.00 (வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு) /30

3.7 **சேவை நிபந்தனைகள்** :-

இப்பதவி தற்காலிகமானது என்பதுடன், தினசரிக் கொடுப்பனவினை வழங்குவதன் அடிப்படையின் கீழ் ஒரு வருடக் காலப்பகுதிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

தர்சனீ கருணாரத்ன,
சமூக சேவைகள் பணிப்பாளர்.

2026.05.

CamScanner

சமூக சேவைகள் திணைக்களம்

திறன் விருத்தி பகல் நேரப் பராமரிப்பு நிலையங்களுக்கு தினசரி அடிப்படையின் கீழ்

..... பதவி தொடர்பில் ஆட்சேர்ப்புச் செய்யும்

விண்ணப்பப் படிவம்

மொழி மூலம் ☐

01. முதலெழுத்துக்களுடன் பெயர் :- .....

02. முதலெழுத்துக்களால் அறியப்படும் பெயர்கள் :- .....

.....

03. முகவரி :- .....

04. தொலைபேசி இலக்கம் :- .....

05. தேசிய அடையாள அட்டை இலக்கம் :- .....

06. பிறந்த திகதி :- .....

07. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று வயது :- வருடங்கள்:- .....
மாதம்:- ..... திகதி:- .....

08. திருமாணமானவர்/திருமணமாகாதவர் :- .....

09. பெண்/ஆண் பாகுபாடு :- .....

10. கல்வித் தகைமைகள் :-

I. க.பொ.த (சாதாரண தரம்) - (ஒரே தடைவையில் பெறப்பட்ட)

வருடம்:- ____ பரீட்சைச் சுட்டிலக்கம்:- _____

பாடங்கள்	தரம்	பாடங்கள்	தரம்

II க.பொ.த. (உயர் தரம்)

வருடம் :- _____ பரீட்சைச் சுட்டிலக்கம்:- _____

பாடங்கள்	தரம்	பாடங்கள்	தரம்

11. தொழில் மற்றும் பிற தகைமைகள் :-

பாடநெறியின் பெயர்	நிறுவனம்	பாடநெறியின் காலப்பகுதி

12. அனுபவம்:-

.....

.....

.....

இவ்விண்ணப்பப் படிவத்தில் என் மூலம் வழங்கப்பட்டுள்ள தகவல்கள், எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டிய வரையில் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் சான்றுபகர்கின்றேன்..

.....

விண்ணப்பதாரரின் ஒப்பம்

CamScanner